**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 192** **நாள்: 24.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையால் தேங்கிய மழைநீர் அனைத்து இடங்களிலும் முழுவதும் அகற்றப்பட்டுள்ளன என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

வடகிழக்கு பருவமழையினால் மழைநீர் தேங்கிய இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரில் **21.11.2018** முதல் **23.11.2018** வரை கடந்த மூன்று நாட்களில் தோராயமாக **108.06** மி.மீ. அளவு மழை பதிவாகி உள்ளது. இந்த மழையினால் **87** இடங்களில் தேங்கிய மழைநீர் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு மோட்டார் பம்புகள் மூலம் முழுவதுமாக அகற்றப்பட்டுள்ளன. இதுவரை மழையின் காரணமாக விழுந்த மரங்கள் முழுவதும் அகற்றப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் வழிவகை செய்யப்பட்டுள்ளன. மேலும், மழைநீர் தேங்கிய **7** சுரங்கப்பாதைகளிலும் மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் அகற்றப்பட்டு போக்குவரத்து பயன்பாட்டில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையின் சார்பில் பருவமழை காலங்களில் பொதுமக்களுக்கு காய்ச்சல், இருமல் மற்றும் தொற்றுநோய்கள் ஏற்படாமல் பாதுகாக்கும் வகையில் **01.11.2018** முதல் இன்று வரை **960** சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்களில் **42,827** பொதுமக்கள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றுள்ளனர் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**